செ. கு. எண்: 267 நாள் : 07.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.10.2013

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், பாலகொலா - 2 கிராமத்தைச் சேர்ந்த திரு. புஷ்பராஜ் என்பவர் 14.9.2013 அன்று தேவபெட்டா பகுதி அருகே காட்டு எருமையால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கெம்பநாயக்கன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவர் 18.9.2013 அன்று கடம்பூர் கிராமம், மல்லியம்மன்துர்க்கம் வனப்பகுதி அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், லிங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளிசாமி என்பவர் 23.9.2013 அன்று சிறுமுகை வனச்சரகம், பெத்திகுட்டை பிரிவு, உரம்பு மேடு பகுதி அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு எருமை தாக்கியதில் அகால மரணமடைந்த புஷ்பராஜ் மற்றும் காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்த ராமசாமி மற்றும் காளிசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த புஷ்பராஜ், ராமசாமி மற்றும் காளிசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**